பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 02 வியாழக்கிழமை 15.04.2021 கதிர் 29

## ரணில் சபைக்கு வருவது நிச்சயம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் நாடாளுமன்றம் செல்வார் என அக்கட்சியின் உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய 2

# யாழ். மாவட்ட இளைஞர்கள் 1,600 பேர் 3 மாதத்தில் இராணுவத்தில் இணைவு

### தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு



**யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1,600 தமிழ் இளைஞர்கள் மூன்று மாதக் காலத்துக்குள் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவித்ததாவது:-**

**பிரிவினைவாதத்துக்கு ஆதரவாக மக்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதை இன்னும் காண்கின்றோம். இத்தகைய சூழ்நிலையில், தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன்வந்திருப்பது மிகப்பெரிய வெற்றியாகும்.** 2

## மீனவர் பிரச்சினைக்கு உரிய தீர்வு வேண்டும்!

### செல்வம் எம்.பி. வலியுறுத்து



(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடிக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க கடற்தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை 2

## சுமந்திரன், சிறிதரன் எம்.பிக்கள் யாழ். வைத்தியசாலைக்கு விஜயம்

### அங்கு நிலவும் குறைபாடுகளை நேரில் ஆராய்வு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் இன்று காலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் 2

## புத்தாண்டு வாகன விபத்துக்களில் 12 பேர் மரணம்; 74 பேர் படுகாயம்!

கொழும்பு, ஏப். 15

தமிழ் – சிங்களப் புத்தாண்டு தினமான நேற்று வாகன விபத்துக்களால் மாத்திரம் 12 பேர் பலியாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

121 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன எனவும், 74 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகம் இடம்பெற்றுள்ளன. அவற்றின் எண்ணிக்கை 53 ஆகும். 30 ஓட்டோக்களும் விபத்துக்குள்ளாகின எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## நோன்பாளிகளுக்கும் ரூ. 5,000 கொடுப்பனவு



ரமழான் நோன்பாளிகளுக்கும் குறைந்த வருமானமுடையவர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதனைப் பெற்றுக்கொள்வதற்கு இறுதி திகதி இல்லை எனவும் அவர் அவர் குறிப்பிட்டார்.

சமுர்த்தி அதிகாரிகளைத் தொடர்புகொண்டு இந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார். 2

## அரசு கவிழும் என்று பகல் கனவு காணாதீர்!

### சஜித்துக்கு பீரிஸ் பதிலடி



கொழும்பு, ஏப்.15

நாட்டு மக்களின் அமோக ஆணையுடன் நிறுவப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு கவிழும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகல் கனவு காணக்கூடாது. 2

## கருத்துக்கணிப்பில் பவித்ரா முதலிடம்!

### அமைச்சர்கள் சிலர் குழப்பத்தில்



இலங்கையில் சிறப்பாகச் செயற்படும் புகழ்வாய்ந்த அமைச்சர்கள் யாரென முகநூலொன்றில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி முதலிடம் பிடித்துள்ளார். அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இரண்டாவது இடத்தையும், விளையாட்டுத் துறை அமைச்சர் 2

## மே தினத்தைத் தனியே கொண்டாட சு.க. முடிவு

கொழும்பு, ஏப்.15

இம்முறை மே தினத்தைத் தனியே கொண்டாடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருக்கின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கமைவாக, கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த முடிவை எதிர்வரும் 19ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்துகின்ற பேச்சில் தெரிவிப்பார் என்று கூறப்படுகின்றது.

எதிர்வரும் மே முதலாம் திகதி உள்ள மே தினக் கொண்டாட்டத்தை மைத்திரியின் சொந்த ஊராகிய பொலன்னறுவையில் நடத்த சுதந்திரக் கட்சி திட்டமிட்டுள்ளது எனவும், அந்தத் தீர்மானம் எந்தச் சந்தர்ப்பத்திலும் மாற்றம் பெறாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர் பிரச்சினைக்கு ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு செல்கின்றது.

இதனால் எமது மீனவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். போர்க்காலத்தின்போது எமது மீனவர்கள் குறுகிய கடல் பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறான ஒரு பிரச்சினை உள்ளபோது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு முயற்சியை மேற்கொண்டுள்ளார் என வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

இந்திய ரோலர் படகுகள் உட்பட படகுகளுக்கு அனுமதி வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், குறித்த விடயம் ஆராயப்பட வேண்டிய விடயம். வெளிப்படையாக இந்த விடயங்களைத் தெரிவிக்கின்றபோது தமிழ் நாட்டு மக்களுக்கும், எங்களுக்கும் இடையில் ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். தமிழ் நாட்டைப் பொறுத்த வகையில் எமது இனத்தின் பிரச்சினை சார்பாக பலர் தீக்குளித்து உள்ளனர்.

பலர் தற்கொலை செய்துள்ளனர். தமிழ் நாட்டு மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். அந்த வகையிலே எமது இனப்பிரச்சினைக்கு அவர்களின் குரல் இன்றியமையாதது. இவ்வாறு எமது தமிழ் நாட்டு மக்கள் எமது இனத்துக்குக் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், தீர்க்கப் போவதாகக் கூறுகின்ற இந்தச் சிறிய விடயங்களைக் கூறுகின்றபோது இரு தரப்புக்களும் கருத்துக்களையும் தெரிவிக்கின்றபோது இரு சமூகத்துக்கு இடையிலும் ஒரு பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

எனவே, இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினை தொடர்பாகக் கடற்தொழில் அமைச்சர் சிந்திக்க வேண்டும். ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் இந்திய அரசுடன் பேசி இரண்டு தரப்பு மீனவர்களுக்கும் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இதனால் எல்லை தாண்டி வருகின்ற, மீன் பிடிக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடிக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. மன்னார் கடற் பிராந்தியத்தில் உள்ள பவளப் பாறைகள் இந்திய இழுவைப் படகுகளால் அழிக்கப்படுகின்றன.

மீன் உற்பத்தியாகும் இடமாக குறித்த பாறைகள் உள்ள நிலையில் அவை அழிக்கப்படுகின்றது. எனவே, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதியில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளை ஊக்குவிப்பது சிறந்ததாக அமையும்.

இரண்டு சமூகங்களுக்கு இடையிலும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளில் யாரும் ஈடுபடக்கூடாது - என்றார்.

## சுமந்திரன், சிறிதரன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா மற்றும் வைத்திய நிபுணர்களுடன் கலந்துரையாடியதோடு வைத்தியசாலையில் தற்போது நிலவும் ஆளணி பற்றாக்குறை, வைத்திய உபகரண பற்றாக்குறை என்பன தொடர்பிலும் ஆராய்ந்தனர். அத்தோடு, வைத்தியசாலை விடுதிகளையும் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தனியான மகப்பேற்று விடுதி அமைக்கப்பட வேண்டும், சிறுநீரக நோயால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிகிச்சை வழங்கும் சிகிச்சைக் கூடம் இடவசதி இல்லாத நிலையில் காணப்படுகின்றது. அதற்கும் ஒரு சிறந்த இடம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் வைத்தியர்களால் முன்வைக்கப்பட்டன.

## யாழ். மாவட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, பொதுமக்களுக்குத் தேவையான தனிமைப்படுத்தப்பட்ட வசதிகளை வழங்குவதற்கு யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினர் மற்றும் விமானப்படையினர் செய்த சேவையைப் பாராட்டுகின்றோம் - என்றார்.

## ரணில் சபைக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சிக்குக் கிடைக்கப்பெற்ற தேசியப்பட்டியல் ஆசனத்துக்கே ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார்.

## நோன்பாளிகளுக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராம சேவையாளர் பிரிவுகள் மட்டத்தில் இனங்காணப்பட்ட குடும்பங்களுக்காக 5,000 ரூபா கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டத்தை பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து அமுல்படுத்துகின்றது.

சமுர்த்திப் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோர், வயோதிபர்கள், விசேட தேவையுடையவர்கள், சிறுநீரக நோய்க்கான கொடுப்பனவைப் பெறுபவர்கள், 100 வயதை எட்டியுள்ள வயோதிபர்களுக்கான கொடுப்பனவைப் பெறும் குடும்பங்களுக்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

புத்தாண்டுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு குறித்த கொடுப்பனவை வழங்க முயற்சிக்கப்பட்ட போதிலும் முடியாமல் போயுள்ளது. இதனால் பணம் கிடைக்காதவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதுவரை நாடு முழுவதும் உள்ள சமுர்த்திப் பயனாளர்கள் 18 லட்சம் பேருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் கொடுப்பனவைத் பெறத் தகுதியானவர்கள் இன்று வியாழக்கிழமை முதல் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

## கருத்துக்கணிப்பில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாமல் ராஜபக்ஷ மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

முகநூலில் ஏன் திடீரென இவ்வாறானதொரு கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது, இதன் பின்புலம் என்னவென அரசியல் களத்திலும் ஆராயப்பட்டுள்ளது. ஏனெனில் முக்கியமான சில புள்ளிகளும் இதில் வாக்களித்துள்ளதாலேயே அரசியல்வாதிகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஆளுந்தரப்புக்குச் சார்பாக செயற்படும் சமூகவலைத்தள செயற்பாட்டாளர்களே இதனை செய்திருக்கக்கூடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இதை எதிரணி பெரிய விடயமாக எடுத்துக்கொள்ளவில்லை.

எனினும், மேற்படி கருத்துக் கணிப்பால் அமைச்சர்கள் சிலர் குழப்பமடைந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. எனவே, இனிவரும் காலப்பகுதியில் அமைச்சின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டும் எனவும், மக்கள் மனங்களை வெல்லக்கூடிய வகையில் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் எனவும் தமது செயலாளர்களுக்கு குறித்த அரசியல்வாதிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர் என அறியமுடிந்தது.

## அரசு கவிழும் என்று ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

'எதிர்வரும் 19ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் நடைபெறவுள்ள கூட்டத்துடன் அரச கூட்டணி பிளவடைந்தே தீரும்' என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத் துரைக்கும்போதே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு குறுக்கு வழியால் நிறுவப்பட்ட அரசு அல்ல. நாட்டு மக்களின் ஆணையுடன் - மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறுவப்பட்ட அரசாகும். எனவே, அரசிலுள்ளவர்கள் மக்களின் ஆணையை மீறிச் செயற்பட மாட்டார்கள். இந்த அரசு கவிழும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகல் கனவு காணக்கூடாது.

அரசைப் பிளவடையச் செய்வது எதிரணியினரின் நீண்ட நாள் சதித் திட்டம். இதற்கு அரசிலுள்ள பங்காளிக் கட்சியினர் எவரும் துணைபோகமாட்டார்கள் - என்றார்.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**
1 1/2 மாத மஞ்சள் கன்று
விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு
எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

**இஞ்சி கன்று விற்பனைக்கு**
தரமான இஞ்சி கன்று
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 021 492 7778

சி.சி.ரீ.வி கமரா பொருத்துதல்,
பராமரித்தல் மற்றும் முதற்தர
கமராக்களை வாங்குவதற்கு
அணுகவும்.
தொடர்புகளுக்கு 077 473 6057

* உங்கள் அடகு நகைகளை
மீட்க உதவுவோம்.
* பழைய நகைகள் கூடிய
விலையில் வாங்கப்படும்.
021 222 2552

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikathiradvt@gmail.com
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புலம்பெயர்ந்தோரைப் புறக்கணிப்பதா?

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி முறையான – சகல தரப்பினாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய – நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய – தீர்வு காணும் எண்ணம் இலங்கையின் தற்போதைய ஆட்சிப் பீடத்துக்குக் கிடையவே கிடையாது.

இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு அடக்குமுறைத் திட்டம் ஒன்றைத் தீர்வாகத் திணிப்பது மட்டுமே அதன் உத்தேசம்.

கோட்டாபய அரசின் நடவடிக்கைகள் அதனைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன.

சர்வதேச ரீதியில் உண்மைகளை எடுத்துரைத்து, தனது கோர முகத்தை அம்பலப்படுத்துகின்றன என்ற காரணத்துக்காக தீர்வில் பங்களிக்க வேண்டிய தரப்புக்களைத் தள்ளி வைத்து, தடைவிதித்து, இணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பை – சந்தர்ப்பத்தை – நிரந்தரமாக அடித்து மூடியிருக்கின்றது இலங்கையின் பௌத்த – சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடம்.

புலம்பெயர் தமிழர்கள் என்பவர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள். இந்த நாட்டில் வெடித்த இனவாதக் கொடூர யுத்தம் அவர்களை இந்த மண்ணிலிருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் தூக்கிப் பூமிப் பந்து எங்ஙனும் பரந்து வீசியுள்ளது.

இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினையில் அவர்கள் முக்கிய பங்காளிகள் (Stake Holders). யுத்தத்தினால் உலகில் நாலாபுறமும் தூக்கி வீசப்பட்ட அவர்கள் தாம் தஞ்சம் புகுந்த நாடுகளில் குடியுரிமை பெற்று, அந்த மண்ணில் தங்கிவிட்டனராயினும், அவர்களும் அவர்களது சந்ததியினரும் இந்த மண்ணுக்கு – தமது தாயக பூமிக்கு – மீளும் முழு உரிமை கொண்டவர்கள் அவர்களின் Right to return என்ற உரிமை மறுக்கப்பட முடியாதது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் புலம்பெயர் தமிழர்களும் பிரதான பங்காளிகள் என்பதை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்ல, தீர்வில் அவர்களும் பங்காளிகள் என்பதை நமது உள்நாட்டுத் தமிழ்த் தலைவர்களும் விடாது வெளிப்படையாக அழுத்தம், திருத்தமாக வலியுறுத்த வேண்டும். அது, நமது தலையாய கடமை. ஆனால் அதை நம் தலைவர்களும் செய்வதில்லை என்பது மனவருத்தம் தரும் உண்மை.

தமிழர் தேசம் – தேசியம் – என்ற பரந்த கட்டமைப்பில் புலம் பெயர் தமிழர்கள் பிரிக்க முடியாத அங்கம். இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குக் காணப்படும் எந்தத் தீர்வும் அவர்களையும் கவனத்தில் உள்வாங்கித்தான் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவர்களின் உழைப்பும், சர்வதேச பக்கபலமும், நிதியும் உங்களுக்குத் தேவை, ஆனால் எங்களின் தீர்வு தொடர்பான விடயங்களில் அவர்கள் பங்காளிகளல்லர், தேவையானால் பார்வையாளர்களாகவோ அல்லது ஆலோசகர்களாக மட்டும் இருக்கலாம் என்று நமது உள்நாட்டுத் தமிழ்த் தலைவர்கள் கருதிச் செயற்படுவது கண்டிக்கத்தக்க தவறான போக்காகும்.

தமிழர்களின் எல்லாப் போராட்டங்களிலுமே உணர்வும், உயிருமாகப் பங்களித்தவர்கள் அவர்கள். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் குளிரிலும், பனியிலும் வெய்யிலிலும், மிக மோசமான சீதோண நிலைகளிலும் கடும் உழைப்பில் அவர்கள் ஈடுபட்டிருந்தாலும், நம் சகோதரர்கள் அவர்கள். அவர்களின் எண்ணங்களும் சிந்தனையும் வாழ்வும் சதா தாயகம் பற்றியதாகவே சுழன்று கொண்டிருக்கின்றன.

நாளை நமது தேசத்துக்கு ஒரு விடிவு கிட்டுமானால், நமது தேசத்தைத் தூக்கி நிறுத்தக் கூடிய வலுவும், திறனும், நிதியும், தற்றுணிவும் அவர்களிடமிருந்துதான் நமக்குக் கிட்ட முடியும். கிட்டும். அத்தகைய தரப்பினரால் தனக்கு நேரடி சர்வதேச அழுத்தம் அதிகரித்து வருகின்றது என்று கண்டதும் அத்தரப்புகளைத் தனது பேரினவாதச் சட்டங்கள் மூலம் தடை செய்து மோதல் களத்திலிருந்து புறம் ஒதுய்யப் பார்க்கின்றது கொழும்பு.

ஆனால் கொழும்பின் இந்தப் பாசா, அந்த ஆட்சிப் பீடம் குறித்து நன்கு அறிந்து, உணர்ந்து கொண்ட அமெரிக்கா போன்ற நாடுகளிடம் பலிக்கவேயில்லை.

*"நீங்கள் தடை விதித்தாலும் நாங்கள் அவர்களுடன் தொடர்ந்து ஊடாட்டத்தில் ஈடுபடுவோம். இலங்கையில் அவரவர்களின் பிரதேசங்களில் நடப்பவை குறித்து பூரண தகவல்கள், நிலைமைகளை அவர்கள் மூலமே நாம் அறிந்து வருகின்றோம். ஆகையினால் எங்கள் ஊடாட்டங்கள் தொடரும்"* என்று அமெரிக்கா வெளிப்படையாகவே கூறிவிட்டது.

புலம்பெயர் தமிழர்களை ஒதுக்கி வைத்து விட்டு, இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது மாப்பிள்ளையே இல்லாமல் கலியாணம் நடத்துவதற்கு ஒப்பானது. இது கொழும்பு ஆட்சிப் பீடத்துக்குப் புரிந்தால் சரி.

# தேங்காய் எண்ணெய் குறித்து மக்கள் பீதியடைய வேண்டாம்

## அமைச்சர் லசந்த அழகியவண்ண கோரிக்கை



மனித பாவனைக்குதவாத தேங்காய் எண்ணெய் சந்தையில் இல்லை. அதனால் மக்கள் தேவையற்ற பீதியை ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

புற்றுநோயை ஏற்படுத்தும் மூலக்கூறுகள் அடங்கிய தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக ஆராய நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுவரும் நடவடிக்கை தொடர்பாகக் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்–

சந்தையில் விற்பனை செய்துவரும் தேங்காய் எண்ணெய்யில் எப்லடொக்சின் இருக்கவேண்டிய அளவுக்கு அதிகம் இருக்கின்றதா என்ற பரிசோதனை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுகாதார அமைச்சின் உணவுப் பாதுகாப்பு பிரிவின் தரக்கட்டளையின் பிரகாரம் பில்லியன்னுக்கு 30 அலகுகளுக்கு அதிகம் இருக்கக்கூடாது என்பதாகும்.

அதனால் சந்தையில் இருக்கும் தேங்காய் எண்ணெய்யில் 30 அலகுகளைவிட அதிகம் எப்லடொக்சின் இருக்கின்றதா என்பது தொடர்பாக இலங்கை சுங்கம் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு தற்போது பரிசோதனை மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் இதற்கு முன்னர் சந்தையில் விற்பனையில் இருக்கும் தேங்காய் எண்ணெய் 125 மாதிரிகள் பெறப்பட்டு, பரிசோதனைக்காக தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பி இருந்தோம்.

அதில் 109 மாதிரிகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருந்தன. அந்த 109 மாதிரிகளிலும் சுகாதார அமைச்சால் எமக்கு வழங்கப்பட்டிருக்கும் வழிகாட்டலின் பிரகாரம் 30 அலகுகளுக்கு குறைவாகவே அவற்றில் எப்லடொக்சின் அடங்கி இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அதனால் தேங்காய் எண்ணெய் பரிசோதிக்கும் நடவடிக்கையை நுகர்வோர் அதிகார சபையால் தொடந்தும் மேற்கொண்டு வருகின்றோம்.

நுகர்வோருக்கு விற்பனை செய்யும் சந்தைகளில் எப்லடொக்சின் அடங்கிய தேங்காய் எண்ணெய் இருக்கின்றதா என்ற பரிசோதனையையும் நாங்கள் மிகவும் பொறுப்புடன் மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே சந்தையில் விற்பனை செய்யப்படும் தேங்காய் எண்ணெய் மனித பாவனைக்கு உகந்ததா, இல்லையா என்ற தேவையற்ற பீதியை மக்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# பேலியகொடை மீன் சந்தைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்



பேலியகொடை மீன் சந்தையின் கழிவகற்றல் கட்டமைப்பை சீர்செய்து சுகாதார நிலையை மேம்படுத்துவது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பேலியகொடை மத்திய மொத்த மீன் விற்பனை நிலையத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், மீன் சந்தை வளாகத்தைப் பார்வையிட்டார்.

இதன்போது, வடிகான் கட்டமைப்புக்கள் செம்மையாகப் பராமரிக்கப்படாமல் இருப்பதை அவதானித்த அமைச்சர், அதற்கான கராணத்தை வினவியதுடன் அதனை உடனடியாக திருத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பணிப்புரை வழங்கினார்.

மேலும் மீன்களை வெட்டுவதற்கான பிரிவொன்று ஏற்படுத்தப்படுவது உட்பட பல்வேறு கோரிக்கைகள் இதன்போது அதிகாரிகளால் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

அதிகாரிகளின் கருத்துகளை செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேற்படி விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

# கடுந்தொனியில் பேசியமை தொடர்பில் கைதானார் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்க அமைப்பாளர்

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளிடம் கடுந்தொனியில் பேசியமை தொடர்பில் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளைக் கடுந்தொனியில் தூற்றியமை தொடர்பில் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி விவகாரம் தொடர்பில் கோட்டை நீதிவான் நீதிமன்றம் சந்தேக நபருக்கு எதிராக திறந்த பிடியாணை உத்தரவை பிறப்பித்திருந்த நிலையில், கொம்பனித் தெரு பொலிஸார் சந்தேக நபரை கடந்தசெவ்வாய்க்கிழமை கைது செய்திருந்தனர்.

இதேவேளை, சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொம்பனித்தெரு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கண்டி – பதுளை ரயில் தடம்புரள்வு

*பதுளை, ஹாலிஎல பகுதியில் ரயில் ஒன்று தடம்புரண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*பதுளையில் இருந்து கண்டி நோக்கி பயணித்த ரயில் ஒன்றே இவ்வாறு தடம்புரண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*ரயில் பாதையை சீர் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ராஜஸ்தான் மருத்துவமனையில் கொவேக்சின் மருந்துகள் திருட்டு!

ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் உள்ள கன்வாடியா அரசு மருத்துவ மனையில் பாதுகாத்து வைக்கப் பட்டிருந்த கொவேக்சின் தடுப்பூசி தொகுப்பில் இருந்து 32 குப்பிகள் மாயமாகியமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

ஒரு குப்பியில் 10 டோஸ் வீதம் மொத்தம் 320 டோஸ்களை யாரோ திருடிச்சென்றுள்ளனர். இது மாநில சுகாதாரத்துறை வட்டாரத்தில் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக மருத்துவமனை அதிகாரி நரோட்டம் சர்மா அளித்த புகாரின் பேரில் காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக துறை சார்ந்த விசாரணைக்கும் உத்தரவிடப்பட் டுள்ளது.

# மேற்கு வங்கத்தில் ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவு தேர்தல் பிரசாரம் ஒருநாள் முன்னதாகவே முடிந்தது

மேற்கு வங்கத்தில் 8 கட்டங்களாக நடைபெறும் சட்ட சபைத் தேர்தலில் 5 ஆவது கட்ட வாக்குப்பதிவு வருகிற 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் ஆளும் திரி ணாமுல் காங்கிரஸ், பா.ஜனதா, காங்கிரஸ், இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் சார்பிலும், சுயேச்சையாகவும் மொத் தம் 319 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

5ஆம் கட்ட வாக்களிப்பிற்காக 15,789 வாக்குச்சாவ டிகள் அமைக்கப்பட்டு தீவிரப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இங்கு தேர்தல் களம் தொடக்கம் முதலே பெரும் பதற்றமும், பரபரப்பும் நிறைந்ததாகவே காணப்படுகிறது. அதனால், 5 ஆம் கட்ட வாக்குப் பதிவுக் கான பிரசாரத்தை ஒருநாள் முன்கூட்டியே நிறைவுசெய்ய தேர்தல் கமிஷன் முடிவு செய்தது.

அதன்படி அங்கு இன்று மாலையில் முடிவடைய



வேண்டிய பிரசாரங்கள் அனைத்தும் ஒருநாள் முன் கூட்டியே நேற்று மாலையுடன் முடிவடைந்தன.

ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் பா.ஜனதா இடையே வெறுப்புப் பேச்சுகள், ஆத்திரமூட்டும் உரைகள், தேர்தல் நடத்தை விதிமீறும் சம்பவங்கள் என பல்வேறு விரும்பத்தகாத நிகழ்வுகள் நடந்து வருவதாகக் குற்றச்சாட்டு கள் எழுந்தன. இதனால் தலைவர்களின் பிரசாரங்களுக்கு தடை விதிக்கும் நிகழ்வுகளும் நடந்து வருகின்றன.

அது மட்டுமன்றி 4 ஆம் கட்ட வாக்குப்பதிவின்போது சிட்டால்குச்சியில் வன்முறை நிகழ்ந்ததால் பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தும் நிலை ஏற்பட்டது. இதில் 4 பேர் உயிரிழந்தனர். அதேநேரம் மற்றொரு வாக் குச்சாவடியில் பா.ஜனதா தொண்டர் ஒருவரை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவமும் அரங்கேறியது. இவ்வாறான பதற்றமான சூழலில், 5ஆம் கட்ட வாக்களிப்புக்கு மக்கள் பெருமளவுக்கு வருவார்களா என்ற சந்தேகம் நில வுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# போதியளவு தடுப்பூசி கிடைப்பதில் அரசு உறுதி ஆளுநர்களுடனான சந்திப்பில் மோடி தகவல்


இந்தியா முழுவதும் கொரோனாத் தொற்று மீண் டும் வேகமாகப் பரவி வருகின்ற நிலையில், நாளுக்கு நாள் புதிய உச்சம் தொடும் வைரஸின் வீரியத்தைக் கட்டுப்படுத்த மத்திய – மாநில அரசுகள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கொரோனாத் தொற்று நிலை தொடர்பாக நேற்று மாநில ஆளுநர்களுடன் பிரதமர் மோடி ஆலோ சனை நடத்தினார். காணொளிக் காட்சி மூலம் நடந்த இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசும்போது,

'10 கோடி தடுப்பூசி டோஸ்கள் என்ற மைல்கல்லை வேகமாக எட்டிய நாடு என்ற பெருமையை இந் தியா பெற்றிருக்கிறது. கடந்த 4 நாட்களில் மேற் கொள்ளப்பட்ட தடுப்பூசி திருவிழாவில் இந்தத் திட் டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, புதிய தடுப்பூசி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாடு முழுவ தும் போதுமான அளவுக்கு தடுப்பூசி கிடைக்கச்செய் வதில் அரசு உறுதியாக இருக்கிறது.

கடந்த ஆண்டு வைரஸை கட்டுப்படுத்துவதற்கு மக்களின் பங்கேற்பு சிறப்பாக இருந்தது. அதை இந்த ஆண்டும் உறுதிப்படுத்த வேண்டும். கொரோ னாவுக்கு எதிரான போரில் சமூகக் குழுக்கள், அர சியல் கட்சிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங் கள் என அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். இதற்கு ஆளுநர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும்.

மாநில அரசுகளுடன் சமூக நிறுவனங்கள் தடை யின்றி ஒத்துழைப்பதை உறுதி செய்ய ஆளுனர் கள் தீவிரமாக செயல்படலாம். தங்கள் சமூக இணைப்



புகள் மூலம் அம்புலன்ஸ், வெண்டிலேட்டர்கள், மருத்துவமனைகளில் ஒக்சிஜன் சிலிண்டர்களை அதிகரிக்க முடியும்.

தடுப்பூசி, சிகிச்சை போன்றவை தொடர்பான செய்திகளைப் பரப்பி, விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். பல்கலைக்கழகங்களில் மாணவர்களுட னான சந்திப்புகள் மூலம் கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் மக்கள் பங்கேற்பை அதிகரிக்க வேண்டும்.

மக்கள் பங்கேற்பில் ஆளுநர்கள் முக்கிய தூண்களாக இருப்பதுடன், மாநில அரசுகளுடன் இணைந்தும் அரசை வழிநடத்தியும் ஆளுநர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் மாநிலங் களின் தேசிய உறுதிப்பாட்டை வலுப்படுத்த முடியும்' என்று தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் துணை ஜனாதி பதி வெங்கையா நாயுடு, மத்திய மந்திரிகள் அமித்ஷா, ஹர்சவர்தன் ஆகியோரும் பங்கேற்றனர்.

# கொரோனா விதி முறை மீறல் புகழ் திறந்த கடைக்கு சீல் வைப்பு!

கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலை நெல்லை மாவட்டத்திலும் வேகமாக பரவி வருகிறது. நேற்றைய தினம் மட்டும் நெல்லை மாவட்டத்தில் 200 க்கும் மேற் பட்டோர் கொரானாவால் பாதிக்கப்பட்டுள்ளமை அடையா ளம் காணப்பட்டது. நெல்லை மாவட்டம் வண்ணாரப் பேட்டைப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான கைப்பேசி நிலையத்தின் திறப்பு விழாவுக்கு விஜய் டிவியின் 'குக்வித் கோமாளி' நிகழ்ச்சியில் பங்கேற்கும் நகைச்சுவையாளர் புகழ் வருகை தந்திருந்தார். அவரைக் காண்பதற்காக ஏராளமான ரசிகர்கள் கடை முன்பு கூடினர்.

புகழைக் காண கடைக்கு முன் குவிந்த ரசிகர்கள் சமூக இடைவெளியைப் பின்பற்றாமலும் முகக் கவசம் அணியாம லும் கூடியதால் நோய்த் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டது. காவல்துறையினர் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைக்கும் நிலை உருவானது.

இதனைத் தொடர்ந்து மாநகராட்சி சுகாதாரத்துறை அதிகாரிகள் கடையை வந்து பார்வையிட்டு, கொரோனா விதிகளை மீறியதாகக் கூறி ஆரம்ப நாளிலேயே கடைக்கு சீல் வைத்துள்ளனர்.

# 'ரெம்டெசிவர்' கொரோனாத் தடுப்பூசி மருந்தை தனி விமானத்தில் கொண்டுவந்த ஆளுநர்



புதுவை மாநிலத்தில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனைகளில் தீவிர சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு 'ரெம்டெசிவர்' என்ற மருந்து செலுத்தப்படுகிறது. அந்த மருந் துக்கு புதுவையில் தட்டுப்பாடு ஏற்பட்ட தையடுத்து, ஆளுனர் தமிழிசை சவுந்தர ராஜன் தெலுங்கானா மாநிலத்தில் இருந்து அந்த மருந்து பொதிகளைப் பெற்று வர நடவடிக்கை எடுத்திருந்தார்.

'யுகாதி' பண்டிகையை முன்னிட்டு ஹைதராபாத் சென்ற அவர், நேற்று மாலை தனி விமானம் மூலம் புதுச்சேரி வந்தபோது 'ரெம்டெசிவர்' மருந்துப் பொதி களை எடுத்து வந்திருந்தார். புதுச்சேரி விமான நிலையத்தில் அந்த மருந்தை சுகாதாரத்துறை செயலர் அருணிடம் அவர் ஒப்படைத்தார்.

அதன் பின்னர் அவர் ஊடகவியலாளர் களைச் சந்தித்தபோது, த 'ரெம்டெசிவர்' மருந்து புதுவையில் முற்றிலும் தீர்ந்து, தட்டுப்பாடு ஏற்பட்டது தெரியவந்தது. இந்த மருந்து ஹைதராபாத்தில் தான் தயா ரிக்கப்படுகிறது. இதே போன்ற தட்டுப்பாடு தமிழகத்தில் வந்த போது ஹைதராபாத் தில் இருந்து கொண்டு செல்ல அவர்க ளுக்கு உதவினோம்.

இந்த நிலையில் யுகாதி பண்டிகை யைக் கொண்டாட தெலுங்கானா மக்கள் எனக்கு அழைப்பு விடுத்தனர். எனவே அங்கு சென்று அந்த மக் களுடன் சேர்ந்து யுகாதி பண்டிகையை கொண்டாடினேன். அப்போது 'ரெம்டெசிவர்' மருந்தை புது வைக்கு பெற ஹைதராபாத் நிறுவனத்திடம் தனிப்பட்ட முறையில் கோரிக்கை விடுத்தேன். அத்துடன் மத்தி ய சுகாதாரத் துறை மற்றும் தெலுங்கானா சுகாதாரத் துறையிடம் பேசினேன். தெலுங்கானா முதலமைச்சரும் எமக்கு உதவினார்.

1,000 டோஸ் 'ரெம்டெசிவர்' மருந்து புதுவைக்கு வழங்கிக் கிடைத்தது. அதனை கையோடு விமானத்தில் எடுத்து வந்தேன். இந்த மருந்து மேலும் தேவைப்பட்டால் உதவ வேண்டும் என்று கோரிக்கை வைத் துள்ளேன். அவர்களும் கொடுப்பதாக உறுதிக் கூறியுள்ளனர். 'ரெம்டெசிவர்' மருந்தை கள்ளச் சந்தையில் விற்பனை செய்வது தெரியவந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

# சமூகப் பாதுகாப்புக்கு தடுப்பூசி அவசியம்!

## நடிகர் விவேக் வலியுறுத்து



நடிகர் விவேக் இன்று சென்னை, ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டார். அப்போது, சுகாதாரத் துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தடுப்பூசி செலுத்திக்கொண்ட விவேக் செய்தியாளர்களோடு உரையா டியபோது –

கொரோனாத் தடுப்பூசி குறித்து பல வித வதந்திகள் பொதுமக்களிடையே உலா வருகின்றன. கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்வதால் நமக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. ஆனால், பாது காப்பு உண்டு. வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முயற்சியாக அரசு மருத்துவமனையில் நானும் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டேன்.

இந்தியாவில் ஒரு நாளுக்கு 2 லட் சம் பேருக்கும், தமிழகத்தில் ஒரு நாளில் கிட்டத்தட்ட 7,000 பேருக்கும் கொரோனா தொற்று ஏற்படுகிறது. முகக்கவசம், கைகளை அடிக்கடி கழுவுதல், தனி மனித இடைவெளி ஆகியவைதான் மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு. ஆனால், கொரோனா தடுப்பூசி மட்டும் தான் மருத்துவ ரீதியான ஒரேயொரு உயிரைக் காப்பாற்றுகின்ற பாதுகாப்பு.

இதைச் செலுத்திக்கொண்டால் கொரோனாத் தொற்று வரவே வராது என்பது உறுதியல்ல. வந்தாலும் உயிரிழப்பு இருக்காது. இரு டோஸ் செலுத்திக்கொண்ட இரு வாரங்க ளுக்குப் பின்பு தான் நோய் எதிர்ப்பு சக்தி நம் உடலில் உண்டாகும். அது வரை நாம் பாதுகாப்பில்லாமல் இருந்து கொரோனா வந்தால் நாம் தடுப்பூசி மேல் பழியைப் போடக்கூடாது. தடுப்பூசி போட்டுக்கொண்டாலும் சமூகப் பாது காப்பு வளையத்துக்குள்தான் நாம் இருக்க வேண்டும்.

அரசு மருத்துவமனைகளில் திறமை யான மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளனர். அவர்களை நம்பி பொது மக்கள் அனைவரும் சீக்கிரமாக தடுப் பூசியைச் செலுத்திக்கொள்ள வேண் டும். யாருக்கும் எந்தப் பக்கவிளைவும் ஏற்படவில்லை என்பதுதான் அரசுத் தரப்பில் சொல்லப்படும் தகவல். சமூகப் பாதுகாப்புக்கு கண்டிப்பாக தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்தாரகை விளையாட்டுக்கழகத்தின் பொன் விழா

மட்டக்களப்பு – ஏறாவூர் இளம்தாரகை விளையாட்டுக்கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் ஏறாவூரின் அரசியல் முன்னோடிகளான முன்னாள் விசேட ஆணையாளர் மர்ஹூம் எம்.ஏ.சி.அப்துல் றஹ்மான் மற்றும் முன்னாள் பிரதிய மைச்சர் டொக்டர் பரீட் மீராலெப்பை ஆகியோரின் நினைவாகவும் நடாத்தப்பட்ட கிரிக்கெட் இறுதிச் சுற்றுப்போட்டியில் 1ஆவது இடத்தை அக்கரைப்பற்று பிபிபி அணி பெற்றுக் கொண்டது.

ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை மாலை போட்டியின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இறுதிச் சுற்றுப்போட்டியில் 2வது இடத்தை மட்டக்களப்பு கோட்டைமுனை இளைஞர் விளையாட்டு கழகமும், 3ஆவது இடத்தை ஏறாவூர் இளம்தாரகை விளையாட்டு கழகமும் தக்க வைத்துக் கொண்டன.

கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கெடுத்துக் கொண்ட அணியினருக்கும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் வெற்றிக் கிண்ணங்களையும் பணப் பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

1வது இடத்தை தனதாக்கிக் கொண்ட அக்கரைப்பற்று பிபிபி அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும் 2ஆவது இடம் பெற்றுக் கொண்ட மட்டக்களப்பு கோட்டைமுனை இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக் கிண்ணமும் 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட்டினால் வழங்கி வைக்கப்பட்டன.

## சாய்ந்தமருதில் கடை முன்பாக ஆணொருவரின் சடலம் மீட்பு

தனியார் வங்கி ஒன்றினால் பராமரிக்கப்பட்ட கடை ஒன்றின் முன்பாக சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் பிரதான வீதிக்கு அருகில் உள்ள கடைத் தொகுதி ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாத ஒருவரின் சடலம் கிடப்பதாக பொதுமக்களின் தகவலின் பிரகாரம் கல்முனை பொலிஸாரினால் குறித்த சடலம் மீட்கப்பட்டிருந்தது.

சுமார் 65 முதல் 70 வரையிலான வயது மதிக்கத்தக்க இச்சடலம் கொலைசெய்யப்பட்டதா அல்லது இயற்கை மரணமா என பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.குறித்த தனியார் கடைத்தொகுதியானது தனியார் வங்கியின் நிர்வாகத்தின் கீழ் உள்ளதுடன் மரணமடைந்தவர் காவலாளியாக நியமிக்கப்பட்டவர் எனவும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.இதற்கமைய குறித்த சடலம் தொடர்பில் ஆராய்ந்து உண்மை நிலையை கண்டறிய குறித்த வங்கி நிர்வாகத்தின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.

## மட்டக்களப்பில் சொந்தக் காணியை 224 பேருக்கு தலா 10 பேர்ச் எனப் பகிர்ந்தளித்த சமூக ஆர்வலர்!



மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிரான் பகுதியில் உள்ள சமூக ஆர்வலரான குருசுமுத்து லவக்குமார் தனக்குச் சொந்தமான பன்னிரண்டரை ஏக்கர் காணியை காணியற்ற வறிய குடும்பங்களுக்கு இலவசமாகப் பகிர்ந்தளித்துள்ளார்.

மாவட்டம் முழுவதிலுமுள்ள கிராமங்கள் தோறும் காணியற்ற குடும்பங்களை இனங்கண்டு ஒரு குடும்பத்திற்கு தலா பத்து பேர்ச் வீதம் 224 பேருக்கு காணிகளை பகிர்ந்தளிக்கின்றார்.

இதன் முதற்கட்டமாக 46 குடும்பங்களுக்கான காணிகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 4.00 மணியளவில் கிரானில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் வறுமை நிலையில் வாடகை வீட்டில் வசிப்போர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் கணவனை இழந்தோர் என அடையாளம் காணப்பட்டவர்களின் எதிர்கால நலன்கருதி இக் காணிகள் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பயனாளிகளின் பிள்ளைகளின் கல்வி மேம்பாடு, பொருளாதாரம் விருத்தி போன்ற விடயங்களை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கையைத் தாம் முன்னெடுத்தார் என நன்கொடையாளர் வி.லவக்குமார் தெரிவித்தார்.

இதில் பொது தேவைகளான மத ஸ்தலங்கள், பாடசாலை போன்றவற்றிற்காக காணிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. குடியிருப்பாளர்களின் எதிர்காலத் தேவை மற்றும் வாழ்வாதாரத்தினை நிவர்த்தி செய்ய சிறுதோட்டப் பயிர்ச் செய்கை நடவடிக்கைக்காக குத்தகை அடிப்படையில் மேலும் 15 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அருட்தந்தை நியூட்டன் அடிகளார், சகல மத ஐயப்பன் யாத்திரை குழு குருசாமி சாம்பசிவம் புனிதாபரன், இளைஞர் அணித் தலைவர் அனோஜன் மற்றும் இளைப்பாறிய மரமுந்திரிகை கூட்டுத்தாபன முகாமையாளர் டி.நிதர்சன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டமையுடன் காணி வழங்குநருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

## நோன்பினை முன்னிட்டு பேரீச்சம் பழம் வழங்கல்

புனித ரமழான் மாத நோன்பினை முன்னிட்டு சம்மாந்துறை பிரதேச எல்லைக்குட்பட்ட பள்ளிவாசல்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 பள்ளிவாசல்களின் கீழுள்ள மஹல்லாவாசிகள் 500 பேருக்கு பேரீச்சம் பழங்கள் வழங்குவதற்காக சம்மாந்துறை சமூக சேவைகள் அமைப்புக்களிடம் பேரீச்சம் பழங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று காலை ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்ட பகுப்பாய்வாளர் அஸ்மி யாசீன் தலைமையில் அவரின் இல்லத்தில் இடம் பெற்றது.

இன் நிகழ்வில் அமைப்புக்களின் தலைவர்கள், பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பேரீச்சம் பழங்களை பங்கிட்டனர்.

## தந்தையை இழந்த 300 சிறார்களுக்கு புத்தாண்டுக்கு ஆடைகள் வழங்கல்



*மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் சமூக நலன்புரி அமைப்பு கடந்த 25ஆண்டுகளாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறுபட்ட மனிதாபிமான பணிகளை முன்னெடுத்து வருகின்றது.*

*தற்போது இவ் அமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் தந்தையை இழந்து குடிசைகளில் வாழும் 300 ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவும் திட்டம் ஒன்றை கடந்த ஆண்டில் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.*

*இத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று நாள்களில் 300 ஏழை மாணவர்களுக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு புதிய உடைகள் வழங்கி வைக்கப் பட்டுள்ளன என அந்த நிறுவனத்தின் இணைப்பாளர் திருமதி சிவசுந்தரி பிரபாகரன் தெரிவித்தார்.*

## கால்வாயில் மீட்கப்பட்ட சடலம் இன்று அடையாளம் காணப்பட்டது

கால்வாய் ஒன்றில் மீட்கப்பட்டு கல்முனை ஆதார வைத்திய சாலையின் சவச்சாலைக்கு அனுப்பப்பட்டிருந்த ஆணொருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதான வீதியோரத்தில் அமைந்திருந்த நீரோடும் கால்வாயில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் கிடப்பதாக பொதுமக்களின் தகவலின் பிரகாரம் சம்மாந்துறை பொலிஸாரினால் மீட்கப்பட்டிருந்தது.

இச்சடலம் கொலைசெய்யப்பட்டு போடப்பட்டதா அல்லது இயற்கை மரணமா அல்லது வாகன விபத்தினால் ஏற்பட்டதா? என பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ள நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த சம்மாந்துறை நீதிமன்ற பதில் நீதிவான் பார்வையிட்டிருந்தார்.

அதன் பின்னர் சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ள நிலையில் சடலத்தின் பக்கெட்டில் இருந்து கைத்தொலைபேசி ஒன்று மீட்கப்பட்டிருந்ததுடன் குறித்த சடலம் வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டிருந்தது.

மேலும் சான்று பொருளாக சடலத்தின் பக்கெட்டில் இருந்த நிறுத்தப்பட்டுள்ள குறித்த கைத்தொலைபேசியை செயற்படுத்தி ஆராய்ந்த பொலிஸார் குறித்த சடலமாக மீட்கப்பட்டவர் வயது 30 மதிக்கத்தக்க வளத்தாப்பிட்டி பகுதியை சேர்ந்த எச்.சிவகரன் மேசன் தொழிலாளி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.இவர் காரைதீவு பகுதியில் விவாகம் செய்தவர் எனவும் இவருக்கு வலிப்பு நோய் உள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.இதற்கமைய பிரேத பரிசோதனையை அடுத்து உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ.பி.எல்.2021 தொடர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு இரண்டாவது வெற்றி

ஐ.பி.எல். 2021தொடரின் ஆறாவது லீக் போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, சன்ரைசஸ் ஹைதராபாத் அணியை 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சன்ரைசஸ் ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8விக்கெட்டுக்களை இழந்து149ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டது. க்ளென் மக்ஸ்வெல் 59 ஓட்டங்களையும் விராட் கோலி 33 ஓட்டங்களையும் எடுத்தனர். ஹைதராபாத் அணியின் ஜேஸன் ஹோல்டர் 3, ரஷிட் கான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

150 என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய சன்ரைசஸ் ஹைதராபாத் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிய, பெங்களூர் அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. சன்ரைசஸ் அணியின் டேவிட் வோர்னர் 54 ஓட்டங்களையும் மனிஷ் பாண்டே 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பெங்களூர் அணியின் சபாஸ் அஹமட் 3 விக்கெட்டுக்களையும் ஹர்சல் பட்டேல் மற்றும் மொஹமட் சிராஜ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக க்ளென் மக்ஸ்வெல் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியோடு விளையாடிய இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ள ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 4 புள்ளிகளோடு புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

# மொன்ட் - கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் 2 ஆவது சுற்றில் ஜோகோவிச் வெற்றி



மொன்ட் - கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டித் தொடர் மொனாக்கோவில் நடைபெறுகிறது.

நேற்று நடந்த ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டம் ஒன்றில் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6 - 4, 6 - 2 என்ற நேர் செட்களில் 22 ஆம் நிலை வீரரான இத்தாலியின் ஜனிக் சின்னெரைத் தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்த ஆண்டில் ஜோகோவிச் தொடர்ச்சியாகப் பெற்ற 10 ஆவது வெற்றி இதுவாகும். மற்றொரு ஆட்டத்தில் 11 முறை சம்பியனான ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 6 - 1, 6 - 2 என்ற நேர்செட்டில் ஆர்ஜென்டினாவின் பெட்ரிகோ டெல்போனிஸ்சை வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

# துடுப்பாட்டத் தரவரிசைப் பட்டியலில் பாபர் அஸாம் முதலிடம்



ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான துடுப்பாட்டத் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. நேற்று வெளியிட்டது. அதில், இந்திய அணியின் தலைவர் விராட் கோலியை பின்னுக்கு தள்ளி 865 புள்ளிகளுடன் பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அஸாம் முதல் முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடிய பாபர் அஸாம், இதே ஆட்டத்தைத் தொடர்ந்தும் வெளிப்படுத்துவாராயின் நீண்ட நாள்களுக்கு முதலிடத்தில் நீடிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக விளையாட்டு விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான துடுப்பாட்டத் தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து பல மாதங்களாக முதலிடத்தில் இருந்துவந்த விராட் கோலி 857 புள்ளிகளுடன் பட்டியலில் 2 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். மூன்றாமிடத்தில் ரோகித் சர்மா (825 புள்ளிகள்), நான்காவதாக ரோஸ் டெய்லர் (801 புள்ளிகள்), ஐந்தாமிடத்தில் ஆரோன் பிஞ்ச் (791 புள்ளிகள்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# ஐ.பி.எல்.2021 இன்றைய போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் மோதுகின்றன




ஐ.பி.எல்.2021தொடரின் இன்றைய போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன.

டெல்லி கப்பிட்டல்ஸ் அணி தனது தொடக்க லீக் ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்தில் சென்னைசூப்பர்கிங்சைவீழ்த்திய உற்சாகத்துடன் இன்று களம் காணுகிறது. வேகப்பந்து வீச்சாளரான ரபாடா தனிமைப்படுத்துதல் முடிந்து இணைவது அந்த அணியின் பந்து வீச்சுப் பலத்தை அதிகரிக்கும்.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தன்னுடைய முதலாவது லீக் ஆட்டத்தில் 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணியிடம் தோல்வியடைந்திருந்தது. எனவே, வெற்றிக் கணக்கினை ஆரம்பிக்க வேண்டிய அழுத்தத்தோடு அந்த அணி விளையாடவிருக்கிறது. மும்பையில் நடைபெறும் இந்தப்போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

# பாகிஸ்தான் அதிரடி வெற்றி ரி20 தொடரில் முன்னிலை பெற்றது!

பாகிஸ்தான் – தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான மூன்றாவது இருபதுக்கு இருபது போட்டி செஞ்சூரியன் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான மலன் மற்றும் மார்க்க இருவரும் அரைச் சதம் கடந்தனர். 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைச் சேர்த்தது தென்னாபிரிக்கா. மார்க்கம் 63, மலன் 55, வன் டெர் டுசென் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பாகிஸ்தானின் மொஹமட் நவாஸ் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதையடுத்து, 204 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் பாகிஸ்தான் அணி களமிறங்கியது. தென்னாபிரிக்காவைப் போலவே பாகிஸ்தானின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களும் மிகச்சிறப்பாக விளையாடினர். முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டபோது 17.4 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 197 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அணித்தலைவர் பாபர் அஸாம் 59 பந்துகளில் 15 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 122 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். மொஹமட் றிஸ்வான் 73 ஓட்டங்களோடும் பஃகர் சமான் 8 ஓட்டங்களோடும் ஆட்டமிழக்காதிருக்க 18 ஓவர்களில் இலக்கை பாகிஸ்தான் அணி அடைந்து, ஒன்பது விக்கெட்டுக்களால் இப்போட்டியில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 4 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரில் 2 – 1 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலையில் உள்ளது. பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் நான்கு இருபதுக்கு இருபது போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடிவருகிறது. ஒருநாள் தொடரை 2 – 1 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற்றியது. இரு அணிகளும் மோதும் நான்காவதும் இந்தத் தொடரின் இறுதியுமான இருபதுக்கு இருபது போட்டி நாளை நடைபெறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் இனவாதிகள் அல்லர் இராஜாங்க அமைச்சர் தகவல்

## நிமல் லான்சா கூறுகிறார்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு இனவெறிக் கட்சி அல்ல என்றும் சிலர் அதை இனவெறி வலைக்குள் இழுக்க முயற்சிக்கிறார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன என்பது அனைத்து இனங்கள் மற்றும் எல்லா மதங்களுடனும் இணைந்து செயற்படும் ஒரு கட்சி எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

சில கட்சிகள் தங்கள் கொள்கைகளைச் செயல்படுத்த ஓடுகின்றன. அது அவர்களின் ஜனநாயக உரிமை. இனம், மதம் அல்லது கட்சி இணைப்பு அடிப்படையில் நாங்கள் பாகுபாடு காட்டுவதில்லை. ஒரு நாடாக நாம் அனைவரின் நலனுக்காக நாட்டையும் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்ய முற்படுகிறோம்.

பொதுஜனபெரமுனவாக விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளோம். அந்த நோக்கங்களுக்காக சட்டங்களைத் திருத்துவதற்காக அந்த பிரேரணைகள் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படும்.

மாகாண சபை அமைப்பு இந்த நாட்டில் நிறுவப்பட்ட அமைப்பாகும். இதைஒழிக்கதற்போதுவழிஇல்லை. மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடைபெறும், மேலும் மக்களுக்கு வாக்குரிமைக்கான உரிமை வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நௌபர் மௌலவியை பிரதான சூத்திரதாரியாக காண்பித்துஇயலாமையை மறைக்க அரசு முயற்சி

## வஜிர சுட்டிக்காட்டு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று இரு வருடங்களாகின்றன. ஆனால் அரசாங்கம் போலிக்காரணங்களை கூறி உண்மையான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதில் தோல்விகண்டுள்ளதாக வஜிர அபேவர்த்தன சுட்டின்னாட்டியுள்ளார்.

பிரதான சூத்திரதாரியாக நௌபர் மௌலவியை அறிவிப்பதன் பின்னணியின் ஊடாக அரசாங்கத்தின் இயலாமையை மறைத்துக்கொள்ள முற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வஜிர அபேவர்தன மேலும் தெரிவிக்கையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்காத நௌபர் மௌலவி சஹ்ரானுடன் ஏற்பட்ட முரண்பாடுகளால் அவரிடமிருந்து விலகியவராவார்.

தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர் எமது அரசாங்கத்தில் இவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட போது இந்தத் தகவல்கள் வெளியாகின.

ஆனால் தற்போதைய அரசாங்கம் இவரையே பிரதான சூத்திரதாரியாக அறிவித்துள்ளது. அவ்வாறெனில் ஏன் இவர் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைக்கப்படவில்லை? இதில் யாருடைய அழுத்தம் தாக்கம் செலுத்துகிறது? நௌபர் மௌலவியை கைது செய்வதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் தொடர்பில் அரசாங்கம் நிச்சயம் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். - என்றார்.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு மட்டுமே 5 ஆயிரம் ரூபாக் கொடுப்பனவு

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம் என சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளின் சங்கத்தின் செயலாளர் சாமர மத்தும களுகே தெரிவித்தார்.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பம் உட்பட 7 பிரிவினருக்கு அரசாங்கத்தால் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டிருக்கும் சர்ச்சை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தினருக்கு மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தினருக்கு மேலதிகமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பம், முதியோர் கொடுப்பனவு பெறும் குடும்பம் உட்பட குறைந்த வருமானம் பெறும் 7 பிரிவினருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

இருந்தபோதும் தற்போது நிதி விநியோகிக்கப்பட்டிருப்பது சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தினருக்கு மாத்திரம் வழங்குவதற்காகும். அதன் பிரகாரம் சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தினருக்கு குறித்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது.

என்றாலும் குறைந்த வருமானம் பெறும் அனைத்து குடும்பத்தினருக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதாக பிரசாரம் இடம்பெற்றதால் அதனை பெற்றுக்கொள்வதற்காக வந்த சமுர்த்தி உதவி பெறும் குடும்பம் அல்லாதவர்கள் சமுர்த்தி அதிகாரிகளுடன் முரண்பட்டுக் கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டது. – என்றார்.




# பண்டிகைக் காலத்தில் ஒன்றிணைந்த மக்கள் கொரோனாத் தொற்று பரவும் அபாய நிலைமை

## வைத்தியர் சுதத் சமரவீர எச்சரிக்கை



கொவிட் - 19 நோய்த் தொற்று எண்ணிக்கை உயர்வடையும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் நாட்டில் கொவிட் தொற்றாளர் எண்ணிக்கை உயர்வடையும் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு பிரதம மருத்துவர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டுக் காலம் நிறைவின் பின்னர் நோய்த் தொற்றாளர் எண்ணிக்கை மேலும் உயர்வடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிகைக் காலத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் நடமாட்டம் காணப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே எதிர்வரும் வாரங்களில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வடையும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரஞ்சன் நாட்டின் பெரும் சொத்து சிறையில் ரஞ்சனை சந்தித்த சஜித்

கொழும்பு, ஏப். 15

ரஞ்சன் ராமநாயக்க இலங்கையின் சொத்தாவார். அவருக்கு நியாயம் கிடைப்பதற்காக ஜனநாயக ரீதியிலும், சட்ட ரீதியிலும், அரசமைப்பிற்கு இணங்கவும் சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

பிறந்துள்ள சித்திரைப் புத்தாண்டு ரஞ்சன் ராமநாயக்கவிற்கு சிறந்ததாக அமைய வாழ்த்துவதற்காக அவரை பார்வையிட வந்தோம்.

அவருக்காக எதிர்வரும் நாட்டில் ஜனநாயக ரீதியிலும், சட்ட ரீதியிலும், அரசமைப்பிற்கு அமையவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும்.



ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி கிடைப்பதற்குத் தொடர்ந்தும் நாம் முன்னின்று செயற்படுவோம்.

ரஞ்சன் ராமநாயக்க என்ற மனிதாபிமானம் மிக்க நபர் இந்த நாட்டின் சொத்தாவார். நாட்டு மக்களுக்காக பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளார்.

மக்கள் அதிகம் நேசிக்கும் அரசியல் தலைவரான அவருக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org